# பிரிக்பீல்ட்ஸில் பாதசாரிகளுக்கு இடையூறு

# மேஜைகளும் நாற்காலிகளும் பறிமுதல்




கோலாலம்பூர், மே 10 -

பிரிக்பீல்ட்ஸ் சுற்றுப் பகுதிகளில் பொதுமக்கள் மற்றும் பாதசாரிகள் நடந்து செல்வதற்கான நடைபாதைகளில் அனுமதியின்றி மேஜைகள், நாற்காலிகள் மற்றும் இதர பொருட்களை வைத்திருந்த வியாபாரிகளுக்கு எதிராக கோலாலம்பூர் மாநகராண்மைக் கழகம் (டிபிகேஎல்) நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜாலான் துன் சம்பந்தன் மற்றும் ஜாலான் தம்பி பிள்ளை பகுதிகளில் எட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்ட டிபிகேஎல் ஊழியர்கள் அப்பொருட்களை பறிமுதல் செய்தனர். அதோடு, சம்பந்தப்பட்ட அந்த வியாபாரிகளுக்கு எதிராக இரண்டு அமலாக்க நோட்டிஸ்களும் ஒரு போக்குவரத்து நோட்டிஸும் வெளியிடப்பட்டன.

ஊராட்சிமன்றத் தரப்பினரின் அனுமதியின்றி, பாதசாரிகள் நடந்து செல்லும் பாதைகளில் மேஜைகள், நாற்காலிகள் மற்றும் இதர பொருட்களை வைத்திருந்த வியாபாரிகளுக்கு எதிராக அந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக, முகநூல் பதிவொன்றில் டிபிகேஎல் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தது.

பறிமுதல் செய்யப்பட்ட பொருள்களில் மேஜைகள், நெகிழி நாற்காலிகள், கூடாரங்கள், பெண்கள் அலங்கார சாதனங்கள் மற்றும் இதர வகை பொருள்களும் அடங்கும். அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களில் அவ்வப்போது கண்காணிப்பும் நடவடிக்கைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று டிபிகேஎல் தெரிவித்தது.